# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள். 04.08.2026</u>

## <u>முன்னிலை</u>

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA-13067/A/2024</u>**

திரு. அ. ஆறுமுகம் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்- 631 501.

**<u>ஆணை</u>**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.08.2026 அன்று இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. அ. ஆறுமுகம் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. ம.ஆஷா, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் இளநிலை மறுவாழ்வு, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், காஞ்சிபுரம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 07.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருமதி. முத்து க.பெ. வேலு என்பவர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் எந்த தேதியில் மாற்றுத்திறனாளியாக பதிவு செய்துள்ளார் மற்றும் அவர் மாற்றுத் திறனாளிகளுக்கான சான்று பெறப்பட்ட போது உறுப்பினர் 1, உறுப்பினர் 2 மற்றும் மருத்துவ குழு தலைவர் அடங்கிய மருத்துவ குழு கையொப்பமிட்டதற்கான சான்று மற்றும் திருமதி முத்து க/பெ வேலு என்பவரின் மாற்றுத் திறனாளிக்குரிய UDID (Unique Disability Identity Card) என்பது போன்ற தகவல்களை 10 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர், 26.04.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 16.08.2024 நாளிட்ட பிரிவு **19(3)-ன்** கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு

மனுவினை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.08.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக திருமதி முத்து க/பெ வேலு என்ற மாற்றுத் திறனாளிக்கு 18.03.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 11(1)இன் கீழ் கோரப்பட்டதில், திருமதி முத்து, க/பெ வேலு 19.03.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தனது தனிப்பட்ட தகவல்கள் அளிக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை 02.04.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தனிநபர் தகவல் வழங்க இயலாது என்ற தகவல் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து அக்கடிதத்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார் மேலும், மேல்முறையீட்டு அலுவலரும் 21.05.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 8(1)((J)இன் கீழ் வழங்க இயலாது எனத் தெரிவித்து தகவல் வழங்கியுள்ளார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரும், மேல்முறையீட்டு அலுவலரும் விவரங்கள் வழங்கக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் உண்மையை மறைக்க வேண்டி, திசை திருப்ப வேண்டி, தவறான முழுமையற்ற, திருப்தியற்ற, மூன்றாம் தரப்பு விவரம் என தகவல் வழங்கியுள்ளானர், மாற்று திறனாளியல்லாத ஒருவரால் அரசு பணம் வீணடிக்கப்படுகின்றது என ஆணையத்தில் தெரிவித்தார்.

6. ஆவணங்களின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் பரிசீலனை செய்ததில் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களில் பெரும்பாலானவை மூன்றாம் தரப்பினர் தொடர்புடைய தகவல் என தெரிகிறது. மேலும், பொது அதிகார அமைப்பின் ஆவணங்களின் அடிப்படையிலும் வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஆணையம் உறுதி செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லை என முடிவு செய்து இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை இத்துடன் முடித்து வைக்கிறது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-13067/A/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்- 631 501.

**<u>வழக்கு எண். SA-13067/A/2024</u>**

**<u>மனுதாரர்</u>**

திரு. அ. ஆறுமுகம்
அனுமந்தண்டலம் கிராமம் (ம) அஞ்சல்,
களியாம்பூண்டி வழி,
உத்திரமேரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்- 603 402.

Je/PA 10.08.2026